UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
27-12-1984
PERIODICALS DIVISION

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 10 ரபி - ஆகி 2 இதழ் 311
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-12-84

## ஜனாதிபதியின் யோசனைகளை

## எந்த வகையிலும் மகாசங்கம் அமுல்படுத்த அனுமதிக்காதாம்

### நாடுதழுவிய போராட்டம் என்கிறார் வண. வல் பொலராகுல

[கொழும்பு]

சர்வகட்சி மகாநாட்டின் இறுதியில் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கென ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தன முன்வைத்துள்ள நகல் சட்டங்கள் அமுல் நடத்தப் படுவதை மகாசங்கம் எந்த வகையிலும் அனுமதிக்கப் போவதில்லையென பௌத்த மகாசங்கங்களின் உயர் சபையின் செயலாளரும் களனி பல்கலைக்கழக உபவேந்தருமான வண வல்பொலராகுல கூறியுள்ளார்.

சிங்கள பல மண்டலய கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்து கையிலேயே வணராகுல் இவ்வாறு கூறினர்.

குறித்த யோசனைகள் அமுல் நடத்தப்படுமானல் அது பயங்கரவாதிகள் விரும்பும் ஈழத்தை உருவாக்கிக்

[6-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# அமைச்சரவையிலிருந்து சிறில்மத்யூவிக்கு கல்தா!

## டென்சில் பெர்னண்டோ புதிய மந்திரி

(கொழும்பு)

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தன நேற்று அமைச்சரவையிலிருந்து வெளியேற்றினர்.

இதையடுத்து பிரதி அமைச்சரும் நீர்கொழும்பு பாராளுமன்ற உறுப்பினருமான திரு. டென்சில் பெர்னண்டோ கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

இனப்பிரச்னைக்கு சுமூகத்தீர்வு காண்பதற்கென ஜனாதிபதி சர்வகட்சி மகாநாட்டில் சமர்ப்பித்த யோசனைகளுக்கும் நகல்சட்டங்களுக்கும் திரு. சிறில் மத்தியூ பகிரங்கமாகக் கடும் எதிர்ப்புத்தெரிவித்துவந்ததின் காரணமாகவே அவர் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

### ஜனாதிபதி அனுப்பிய கடிதம்

பதவி நீக்கம் செய்யப்பட்டதின்பின் திரு சிறில் மத்தியூவுக்கு ஜனாதிபதி அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் சர்வகட்சி மகாநாட்டு யோசனைகளுக்கெதிராக வேண்டுமென்றே திரு. சிறில்மத்யூ கண்டனக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

சர்வகட்சி மகாநாடு குறித்து அமைச்சரவை உறுப்பினர்களுக்கு விளக்கமளித்ததாகவும் அவர்கள் இது குறித்து கொண்டிருக்க வேண்டிய சம்பிரதாயங்கள் விதிமுறைகள் என்பன பற்றியும் விளக்கியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, திரு. சிறில்மத்தியூ இவற்றை உதாசீனம் செய்துள்ளார். அவர் வேண்டுமென்றே சர்வகட்சி மகாநாடு குறித்து தமது கண்

(6-ம் பக்கம் 3ம்கலம் பார்க்க)

## அமைச்சரவை மரபை தாம் மீறவில்லையாம்

[கொழும்பு]

சிங்கள மக்களின் நன்மை கருதியே தாம் பகிரங்கமாகச் சில கருத்துக்களை வெளியிட்டதாக திரு. சிறில் மத்தியூ கூறினர்.

பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அவர் ஒரு எம் பி. என்ற முறையில் கருத்து வெளியிட எனக்கு உரிமை உண்டு. பகிரங்கமாகக் கருத்து வெளியிடலாம் என ஜனாதிபதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே நான் அமைச்சரவை மரபை மீறவில்லை. சிங்கள மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள நிலைமையை வெறுமனே பேசாமலிருக்க முடியாது. இந்த யோசனைகளை அனுமதித்தால் தென் இலங்கைக்கே பயங்கரவாதிகள் சிங்களவரை தள்ளிவிடுவார்கள் என்றார்.

## சிறில் மத்தியூவிற்கு ஆதரவாக கொழும்பில் கோஷம்

[கொழும்பு]

கொழும்பு நகரின் சில முக்கிய பகுதிகளில் திரு. சிறில் மத்தியூவுக்கு ஆதரவாக வாகனங்களில் அவரது ஆதரவாளர்கள் கோஷமிட்டுக்கொண்டு சென்றனர்.

''சிறில் மத்தியூவே எங்கள் வீரர்'' ''சிறில் மத்தியூவே எங்கள் தலைவர்'' என்று அவர்கள் கோஷித்தனர்.

பொலிஸ் தலைமையகம் இதனுல் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படலாம் என எதிர்பார்க்கின்றது இது குறித்துச் சகல பொலிஸ் நிலையங்களையும் அது பாதுகாப்புக்கு உசார்நிலைப்படுத்தியுள்ளது.

கொழும்பில் ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெறும்பட்சத்தில் இன்று ஊரடங்குச்சட்டம் அமுல் நடத்தப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது [கி]

## யாழ். செயலகத்தில் அமர்ந்து 200 பெண்கள் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திற்குள் நேற்று சுமார் 200 பெண்கள் சுலோக அட்டைகளுடன் அமர்ந்து

[6-ம் பக்கம் 5கலம் பார்க்க]

## மார்ச்மாதம் முதல் 3388 பேர்கைது!

[கொழும்பு]

கடந்த மார்ச் மாதத்திலிருந்து 3388 பேர் வடபகுதியில் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தனர் என்று தேசிய பாதுகாப்பமைச்சர் திரு லலித் அத்துத்முதலி தெரிவித்துள்ளார்.

இவர்களில் 2784 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் 604 பேர் மட்டுமே தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினர். இந்த 604 பேரில் 103 பேர் தீவிர பயங்கரவாதிகள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (கி)

## யாழ். நகரில் கைதானவர்கள் 84 பேர் தொடர்ந்து தடுப்புக்காவலில்!

(யாழ்ப்பாணம்]

கடந்த 19-ம் திகதி புதன் கிழமை யாழ்ப்பணம் நகரில் இராணுவத்தினரால் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் விடுதலையானவர்கள் தவிர தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் பெயர் விபரம் வருமாறு:

கதிரவேலுப்பிள்ளை செல்வராஜா - ... கம், இராமச்சந்திரன்-பண்டத்தரிப்பு, மார்க்கண்டு திருச்செல்வம்-கந்தர்மடம், சையன் பிரபாகரன் - யாழ்ப்பாணம், பொன்னையா ஜெயராஜா-யாழ்ப்பாணம், பழனிச்சாமி ஜெகதீஸ்வரன் - காங்கேசன்துறை, சாதர ராசையா-யாழ்ப்பாணம், கோணலிங்கம் பார்த்திபன்-யாழ்ப்பாணம், வல்லிபுரம் ரட்ணம்-யாழ்ப்பாணம், காசிப்பிள்ளை பாஸ்கரன்-கட்டுவன். நடேஸ்

[6-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

## நத்தார் வாழ்த்து

வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களை ஈழநாடு தெரிவித்துக்கொள்கின்றது.

— நிர்வாகி

## இருபாலையில் மரணமானவர் இருவர்

[யாழ்ப்பாணம்]

இருபாலை பகுதியில் ஆயுதம்படையினர் தேடுதல் நடத்தியபோது துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான இருவரின் சடலங்கள், நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்விரு சடலங்களும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பின் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகிறது. (க)

## அவசரகால சட்டத்தின் கீழ் விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் துப்பாக்கி சூட்டுக்குப் பலியான கூட்டுறவு சங்க மனேஜர் எஸ். சிவராசா, அவரது 10 வயது மகன், நிமலன் ஆகியோரின் மரண விசாரணைகள் அவசரகாலசட்ட விதிகளின்கீழ் நடைபெற்றது.

யாழ். மேலதிக நீதவான் கே. பீ. எஸ். வரதராசா பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இருசடலங்களும், குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (க)

## மூதூரில் ஒரு வாரத்தில் ஏழு பேர் பலி!

[திருகோணமலை]

மூதூர் பகுதியில் ஒரு வார காலத்தில் 7 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர்.

இம்மாதம் 18-ம் திகதி தியேட்டர் ஒன்றுக்கு அருகில் ரஞ்சித் தகநாயக்கா என்பவர் சயிக்கிளில் வந்த இளைஞரால் சுடப்பட்டதாக விசாரணையில் கூறப்பட்டது. மரண விசாரணையின் பின் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

19-ம் திகதி ஆண் ஒருவரின் சடலம் மூதூரிலுள்ள ஒரு வீதியில் காணப்பட்டது. அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் விசாரணை நடைபெற்றுச் சடலம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

20-ம் திகதி இருல்குழி என்ற இடத்தில் தில்லையம்பலம் இரத்தினசிங்கம் என்பவர் துப்

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## யாழ். ப. நோ. கூ. ச. கிளையில் ரூ. 500 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளை ஒன்றிலிருந்து சுமார் 526 ரூபா கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரிப் பின் வீதியிலுள்ள கிளையிலேயே நேற்றுப்பிற்பகல் இக்கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றது.

இனந்தெரியாத 3 இளைஞர்கள் பணத்தைக்கொள்ளை அடித்துக்கொண்டு ஓடும்பொழுது கிளை மனேஜர் அவர்களைப் பிடிக்க ஓடிச்சென்ற பொழுது 'டைனமைட்' போன்ற ஒன்றை கொளுத்தி எறிந்து விட்டு அவர்கள் ஓடியதாகவும் அது வெடித்ததைத் தொடர்ந்து மனேஜர் மயக்கமடைந்து விழுந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மயக்கமடைந்த மனேஜருக்கு உடனடியாகச்சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கோ கட்டிடத்துக்கோ துவித சேதமும் ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மணிக்கே வவனியா அடங்கிவிடுகிறது

(வவனியா)

வவனியா நகரம் தினமும் பகல் 12 மணியானதும் அடங்கிவிடுகிறது. சன நடமாட்டமின்றி நகர் வெறிச்சோடிக் கிடக்கிறது நகருக்கு வரும் மக்கள் அவதியாக தேவையான பொருட்களைப் பெற்றுக் கொண்டு நேரகாலத் தோடு வீடு செல்லும் காட்சி காண முடிகின்றது

கிராமப்புற பிரயாண சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது,

வவனியா சாலை ஒரு சில பஸ்கள் மட்டும் சேவையாற்றின' அதே வேளையில் இங்குள்ள கஷ்டப்பிரதேச பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சென்றடைவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது

வாகன போக்குவரத்து இல்லாமையே இதற்குக் காரணமாகும் யாழ். வவனியா மினி பஸ் சேவை இரு வார காலமாக நடைபெறவில்லை

தினமும் வவனியா பஸ்நிலையத்தில் யாழ் நகர்செல்வதற்கு பெரும் தொகையான மக்கள் கூடி நிற்கும் காட்சி காணக் கூடியதாக உள்ளது.

யாழ் நகர் செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வ. தொ. த பி உதவி அரச அதிபர் பணிமனையில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

மண்ணெண்ணை பெறுவதற்கு தினமும் விற்பனை நிலையங்களின் முன் நீண்ட கியூவரிசையில் சனக் கூட்டம் காணப்படுகின்றது.

ஆயுதப்படையினர் நகருக்கு வந்து விட்டால் காணும், சனங்களே பொருள்களை வாங்கியதும், வாங்காமலும் பறந்து விடுகின்றனர்.

வவனியா மக்கள் அச்சத்துடனும் பீதியுடனும் காலத்தைப் போக்குகின்றனர்.

---


யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985

மீட்டல் வகுப்புகள்

3-12 84ல் ஆரம்பமாகும் என்று பிற்போடப்பட்ட வகுப்புகள் 2-1 85ல் ஆரம்பமாகின்றன.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
தொலைபேசி எண்; 22617
376, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(1043)


---

## ஓராண்டு நினைவஞ்சலி

திரு. வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)



மலர்வு:
1917- 06- 03

உதிர்வு:
1983- 12- 25

எம் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அருப்பட்டு பட்டு, வழியும், வளமும் தந்து ஒளிவளக்காய் திகழ்ந்த, எங்கள் இனிய தந்தையே! பண்புடனும் பாசத்துடனும் எம்மை அரவணைத்த தெய்வமே! இவ் ஓராண்டு நினைவு நாளிலே உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.
42/2, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

1072

---

## மரண அறிவித்தல்

திருமதி தேவகுஞ்சரி ஸ்கந்தராஜா
(சிவலிங்கம்)

கட்டுவனைச் சேர்ந்த திருமதி தேவகுஞ்சரி ஸ்கந்தராஜா (தேவா) பிரான்சில் 18-12-1984 செவ்வாய் அகாலமரணமானார்; இவர் கட்டுவன் T. ஸ்கந்தராஜாவின் பரிஸ். (முன்னைநாள் இ போ. ச. உத்தியோகத்தர் கிளிநொச்சி) அன்பு மனைவியும், கஜேந்திரன், சிவதர்ஷினியின் அன்புத் தாயாரும், நீர்கொழும்பு காலஞ்சென்ற கார்த்திகேயன், கோண்டாவில் பாக்கியத்தின் அன்பு மகளும், கௌரி வேல்சாமி ஆசிரியை யா/ கதீஜா மகாவித்தியாலயம், மணிமேகலை பொன்னம்பலம் ஆசிரியை குப்பிளான், ஆனந்தசிவம் கட்டுநாயக்க விமானநிலையம், காலஞ்சென்ற ஆனந்தவேல், சத்தியவாணி ஹேமகுமார் ஜேர்மனி, இந்திராணி யோகராஜா ஒட்டுவெளி, மிதிலைப்பொன் சிறீதரன் பரிஸ், தேவிசாரதாமணி சத்தியசீலன் பரிஸ், தேவமனோகரி மகாலிங்கம் ஜேர்மனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கட்டுவன் ஜெயபவானி ஆனந்தசிவத்தின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-12-84 திங்கள் பகல் 12 மணிக்கு பரிஸில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

—தகவல்; செ. வேல்சாமி,
519, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1076

---

## லயன்ஸ்கழகம் 10 ரூ. லட்சம் நன்கொடை

(கொழும்பு)

இலங்கை லயன்ஸ் கழகம் தேசிய பந்தோபஸ்து நிதிக்கு 10 லட்சம் ரூபவை நன்கொடையாக வங்கவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமைபுரியும் பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் இக்கழகம் உணவுப் பார்சல்களையும் வழங்கவுள்ளது.

## துப்பாக்கி முனையில் அபகரித்தனர்

(சாவகச்சேரி)

கொடிகாமம், மீசாலை வடக்கு கிராம சேவகர்களிடம் இருந்த சுமார் 500 உணவுக் கட்டுப்பாட்டுப் பத்திரங்களை நேற்று முன்தினம் இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்

கிராமசேவையாளர்களின் காரியாலயத்துக்குச் சென்ற இளைஞர்களே படிவங்களை எடுத்துச்சென்றனர் எனவும் அப்படிவங்களில் பெரும்பாலானவை குடியிருப்பாளர்களால் நிரப்பப்பட்டன எனவும் தெரியவந்துள்ளது

இச்சம்பவம்பற்றி கிராம சேவகர்கள் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரிடம் புகார் தெரிவித்துள்ளார் என அறியப்படுகின்றது.

---

## யாழ். தீயணைக்கும் படை நிதி: ரூபா 5 லட்சத்து 22ஆயிரம் சேர்ந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சிமன்ற தீயணைக்கும் படை நிதிக்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம் வருமாறு:

முன்தொடர்ச்சி ரூ 505,123 65 பாணிக்கம் வீரகத்தி புத்தூர் கிழக்கு, புத்தூர் 100-00 நீக் லஸ், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் 100-00, லிங்கம்ஸ் சில்க்கவுஸ், 18, நவீன சந்தை 2, 00-00, மாணிக்கம் செல்லக்கிளி, நீர்வேலி 250-00 அன்பர் 500-00, எல் எம். ஆர் டீ. மெல், கொழும்பு ஒப்ரிக்கல்ஸ், கொழும்பு 200-00, யாழ்ப்பாணம் யூனைட்ரட் கிளப் 3,000-00, ஏ. பொன்னுத்துரை, 175/6, கோவில் வீதி, யாழ் 500-00, சௌக்கிய சாரணிகளும், மருத்துவ மாதர்களும் யாழ். அரசினர் வைத்தியசாலை 1,605-00, திருமதி பிரான்சிஸ் பெலிசித்தேஸ், 509, பீச் வீதி 150-00 செயலாளர் கொக்குவில் சன சமூகநிலையம், பிரம்படி 473-25 ஆர். மாணிக்கசிங்கம், எம் எவ் டிராக்ரேர்ஸ் என்ஜினியேர்ஸ் 76, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 300-00, யாழ் மாநகராட்சிமன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் 4,600-00, யாழ் மாநகராட்சிமன்றம்-ரிக்கற்மூலம் வசூல் 530-00, ரீகல் தியேட்டர்- ரிக்கற்மூலம் வசூல் 1,203-50. மொத்தம் ரூ. 5,22,260-40.

---

# இருபாலைச்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் நேற்றுமுன் தினம் ஆயுதப்படையினர் நடத்திய சோதனையின்போது இரு குடியேற்றவாசிகள் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார்கள்.

மற்றொரு குழந்தையும் துப்பாக்கிச்சூட்டுககுப் பலியானது

பலியான இரு குடியேற்றவாசிகளின் சடலங்களும் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இக்குடியேற்றத்திட்டத்திலுள்ள சில கடைகளும், சில வீடுகளும் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடைகளில் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக யாழ். பிரஜைகள் குழுவிற்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

## சிறிகாந்த் காப்டன்

[சென்னை]

அடுத்த மாதம் 7ம் திகதி ஹைதராபாத்தில் நடைபெறும் இங்கிலாந்து - தென் மண்டல அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த கே. சிறிகாந்த் தென் மண்டல அணிக்கு காப்டனாக இருப்பார்.

## நடவடிக்கை

சென்னை டிச 24,

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் உடல் நிலைபற்றிய படங்களைத் திரித்துவெளியிட்ட பத்திரிகைகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

## யாருடையது

நாவாந்துறை சவச்சாலை வீதியைச்சேர்ந்த திரு. துரைராசா ஞானசேகரம், பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு தம்பிராசா தம்பு, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி திரு. சங்கரய்யா கனகராசா [பாஸ்கர்), இளவாலை பெரியவிளான் திரு அருளப்பு ஜெறூட் ஜெயசீலன், புத்தளம் போல்ஸ் வீதி திரு சுப்பிரமணியம் ஆனந்தா ஆகியோரின் அடையாள அட்டைகளும், ஒரு பித்தளை திறப்பும் ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# பாதிக்கப்பட்ட மீனவர் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

கடல்கண்காணிப்பு வலயத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு தொழில்செய்யமுடியாது பட்டினியல் வாடும் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் தமக்கு அரசிடமிருந்து உணவுப் பொருட்கள் பெற்றுத்தருமாறு பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலரிடம் தமது பெயர்களை பதிவுசெய்து வருகின்றனர். பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடந்த சில தினங்களாக பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. எஸ். சுந்தரமூர்த்தியிடம் வந்து தமது கஷ்டநிலையை முறையிட்டு அரசிடமிருந்து நிவாரணம் பெற்றுததருமாறு தங்கள் பெயர்களை பதிவுசெய்து வருகின்றதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

## மதில் உடைக்கப்பட்டது

[மன்னார்]

மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள விற்பனைத் திணைக்களத்தின் முன் மதில் பாதுகாப்புக் கருதி உடைக்கப்பட்டுள்ளது.

---


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒருவருடசீமைப் பெண் பன்றி (கன்னி) விற்பனைக்கு உண்டு விருப்பமானவர்கள் நேரில்வந்து பார்வையிடலாம் விபரங்களுக்கு யூனியன் பேக்கரி சாவகச்சேரி. 1084

45 நாள் சுத்தமான அல்சேசன் (Pine Alsation நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. ச. தியாகராசா, கேணியடி லேன், திருநெல்வேலி. (1077)

### தேவை

எமது பேக்கரிக்கு கேக் பணிஸ் மற்றும் சுவீற்ஸ்வகைகள் தயாரிப்பதில் அனுபவமும் திறமையும் உள்ள பாஸ் ஒருவர் உடன் தேவை நேரில் வரவும் ஹோட்டல் றேலெக்ஸ் 340 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம், 1085

### காணவில்லை

நாகலிங்கம் காந்திநேசன் இல 108 உருத்திரபுரம் என்ற விலாசத்தைஉடைய எனது Z 14527 இலக்கமுடையகடவுச் சீட்டு (பாஸ்போட்) தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன் தகுந்தசன்மானம் வழங்கப்படும். 1078

### தவறிவிட்டது

49363038 V இலக்கமுடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்குமிடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். N. இராகவன் சுதுமலை வடக்கு. மானிப்பாய், அல்லது கட்டிடத்திணைக்களம் பிறவுண்வீதி கொக்குவில், 1086

சுப்பிரமணியம் இராமலிங்கம் உடபாகைத்தோட்டம் பொர்லாங்கொட விலாசமிட்ட 261710765 இலக்க அடையாள அட்டை 13-12-84 அன்று யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர் பிள்ளையார் ஸ்ரோஸ் கைதடிசந்தியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். 1061

க. கணகலிங்கம்- க. ஜீவநாதன்- க. கமலாதேவி மூவரினதும் உணவு முத்திரைகள் யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து கீழ்காணும் விலாசத்திற்கு நேரிலோ அல்லது தபால்மூலமோ அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். க. கணகலிங்கம்- 10ம் வட்டாரம், ஈச்சங்காடு- புங்குடுதீவு 1081


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிகப் பெரும்பான்மையுடன் மீண்டும் ரஜீவ் பிரதமராவார்!

## தமிழ்நாட்டில் பலத்தபோட்டி தேர்தல்அமைதியாக நடந்தது



உலகமே எதிர்பார்த்திருந்த இந்தியாவின் 8-வது பொதுத் தேர்தல் நேற்று ஆரம்பமாகியது.

பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தலைமையிலான இந்திராகாங்கிரஸ் கட்சி உட்பட ஏழு பிரதான அரசியல் கட்சிகள் இந்த லோக்சபா (பாராளுமன்றம்) தேர்தலில் போட்டியிடுகின்றன.

இந்தியாவின் மொத்த லோக்சபா தொகுதிகள் 542 ஆகும். ஆனால் இவற்றில் 509 தொகுதிகளில் மட்டுமே இம்முறை தேர்தல்கள் இடம் பெறுகின்றன! ஏனைய தொகுதிகளில் அரசியல், மற்றும் காலநிலை, மக்கள் வாழ்க்கை ஆகியனவற்றில் சீரற்ற நிலைமை காணப்படுவதால் தேர்தல்கள் ஒத்திப்போடப் பட்டுள்ளன.

தெற்கில் தமிழ்நாட்டில் சட்டசபைத்தேர்தலும் லோக்சபா தேர்தல்களுடன் இடம் பெறுகின்றன. 234 சட்ட சபைத் தொகுதிகளில் 1468 பேர் போட்டியிடுகின்றனர்.

லோக்சபா தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி மிக உறுதியான ஆதரவைப் பெற்றுள்ளது. இந்த ஆதரவு பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவு காரணமாகவே அந்தக் கட்சிக்கு இவ்வளவு பெருந்தொகையாகக் காணப்படுகிறது.

அரசியல் அவதானிகள் இந்த ஆதரவை 'இந்திராவின் அனுதாப ஆதரவு அலைகள்' என்று வர்ணித்துள்ளனர்

பிரதமர் திரு. ரஜீவ் காந்தியும் தமது கட்சிக்கு அமோக ஆதரவு இருக்கின்றபோதிலும் தேர்தல் பிரசாரங்களை அசுர வேகத்தில் மேற்கொண்டேயிருந்தார். அவரது தொகுதியான அமேதியில் அவரை எதிர்த்து அவரது மைத்துனியான திருமதி மேனகா காந்தி போட்டியிடுகிறார்.

### மேனகா விவகாரம்

ஆனால் திருமதி மேனகா தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் செய்ததிலிருந்து எதுவித பிரமண்டமான பிரசாரங்களிலும் ஈடுபடமுடியாமல் போயிருந்த . இதற்கு ரஜீவின்ஆதரவு அலை அவரது செல்வாக்கை மூழ்கடித்ததே காரணம். அத்துடன் அண்மைக்காலங்களில் இந்தியர்களின் வெறுப்பைச் சம்பாதித்த சீக்கிய சமூகப் பெண்ணுகவும் அவர் இருக்கிறார்.

1952ம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் கட்சியே இந்தியாவில் அதிக காலம் பதவி வகித்தது. 1977ம் ஆண்டில் இக்கட்சி ஜனதா அரசினல் தோற்கடிக்கப்பட்டிருந்தது. ஆயினும் 1980ம் ஆண்டில் இந்திரா காங்கிரஸ் என்ற புதிய பெயருடன் இக்கட்சி 352 ஆசனங்களை லோக்சபாவில் பெற்று பெரும்பான்மைப் பலத்துடன் [illegible] ஆட்சியமைத்தது

### முன்கூட்டியே நடந்த தேர்தல்

தொடர்ந்து நான்கு வருடங்கள் இது ஆட்சி செய்தது. 1985ம் ஆண்டு ஜனவரியில எட்டாவது பொதுத் தேர்தலை நடத்த மறைந்த பிரதமர் இந்திரா திட்டமிட்டிருந்தார். ஆனாலும் அவரது கொலையினல் எழுந்த ஆட்சிமாற்றம் பிரதமர் ரஜீவை ஒருமாதம் முன்னதாகவே டிசம்பரில் பொதுத் தேர்தலை நடத்த உத்வேகம் அளித்தது.

மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீது நாட்டு மக்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த அனுதாபம், எதிர்க்கட்சிகள் உறுதியற்றுக் குலைந்திருக்கும்நிலை, இவற்றுக்கு மேலாக அக்கட்சிகள் ஒன்றுபட்டு ஒரு உறுதியான எதிர்க்கட்சியை அமைக்க முடியாத நிலை ஆகியவற்றைப் பார்க்கும் போது மிகுந்த உறுதி, கட்சிக் கட்டுப்பாடு, ரஜீவின் தலைமை ஆகியவற்றைக் கொண்டுள்ள இந்திரா காங்கிரஸ்கட்சி நிச்சயம் அதிகப் பெரும்பான்மையுடன் மத்தியில் ஆட்சியமைக்கும்.

### தமிழ் நாட்டின் நிலைமை

தமிழ் நாட்டில் சட்டசபைத் தேர்தல் இத்தடவை நன்கு சூடுபிடித்துள்ளது. அ. தி மு. க வே இத் தேர்தலில் வெற்றி பெறும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் திரு. எம். ஜி. இராமச்சந்திரனையே உயிரோட்டமாகக் கொண்டிருந்த இக் கட்சி தற்போது பெருமளவு உறுதியுடனில்லை. எம். ஜி. ஆருக்காகவே அ. தி. மு. க. உறுப்பினர்கள் முன்பு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆனல் அவர் சுகயீனமுற்றுள்ளநிலை எதிர்க்கட்சியான தி.மு.க.வை விழிப்படைய வைத்துள்ளது

எம். ஜி. ஆரை விட்டால் வேறெவரும் அ. தி. மு. க.வை உறுதியாக இல்லை என்பதை



தமிழகத்தார்கள் உணருகிறார்கள்.

அ தி, மு. கவைத் தெரிவு செய்தால் சுயநினைவற்ற எம். ஜி ஆரின் தலைமையில் அவரது கட்சிக்காரர்கள் அவரை ஒரு பொம்மையாக மட்டுமே பாவிப்பார்கள் என்பதும் அவர்கள் ஊகம். இந்நிலையில் தி, மு. க. எம். ஜி. ஆரை எதிர்க்காமல், அவரை ஒரு பெறுமதிமிக்க தேசிய சொத்தாக்கிவிட்டுள்ளது. தாம் ஆட்சிக்கு வந்தால் அவருக்கு சிறந்த வைத்தியம், பராமரிப்பு என்று கூறிவருகிறது. இதே வேளை அவரில்லாத கட்சி வலுவற்றது என்பதையும் தெரிவித்துள்ளது.

இதனல் தற்போது நன்கு கட்டுக் கோப்புடனிருக்கும் தி. மு க. இச்சட்டசபைத் தேர்தலில் அ. தி. மு, க, கட்சியுடனல்ல, எம். ஜி. ஆர். மீதான அனுதாபத்துடனேயே போட்டியிடுகின்றது என்பது தெளிவு. எம். ஜி. ஆருக்கும் பெருமளவு மதிப்பளித்து, தனது கட்சியையும் பலப்படுத்தும் தி. மு க எளிதில் ஆட்சியமைக்கவும்கூடும் என்பது தற்போதைய கணிப்பாக உள்ளது.

### நடந்து முடிந்த தேர்தல்கள்

1952ம் ஆண்டு முதல் ஏழு லோக்சபா தேர்தல்கள் இந்தியாவில் இடம்பெற்றுள்ளன.



இத்தேர்தல்களில இந்திரா காங்கிரஸ் கட்சிபெற்ற ஆசனங்களின் விபரம் வருமாறு: 1952:- 364, 1957:- 371, 1962:- 361, 1967:- 283, 1971;- 352, 1977:- 153, 1980:- 352.

இவற்றில் 1971ம் ஆண்டு மட்டுமே இந்திரா காங்கிரஸ் 153 ஆசனங்களுடன் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது,

22 மாநிலங்களிலும், 9 யூனியன் பிரதேசங்களிலும் லோகசபா தேர்தல்கள் இடம்பெறுகின்றன. இவற்றில் உத்தரப் பிரதேஷ் மாநிலமே 85 அதிகூடுதல் லோக்சபா தொகுதிகளைக் கொண்டுள்ளது.

–அனந்த்

## கம்யூட்டர் அபகரிப்பு! மாணவர் பாதிப்பு!

(உடுவில்)

உடுவிலில் உள்ள பிரபல தனியார் நிறுவனமொன்றில் கம்யூட்டரும் அதன் இணைப்பும் அபகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்களினதும் மாணவிகளினதும் கல்வி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில தினங்களில் திருப்பி ஒப்படைப்பதாக சில இளைஞர்களினல் சம்யூட்டர் அபகரிக்கப் பட்டதாகவும் இரு வாரங்களாகியும் கிடைக்கவில்லை என்றும் இதன் விளைவாக செயல்முறைப்பயிற்சி தடைப்பட்டிருக்கிறதென்றும் முறையிடப்பட்டுள்ளது.


உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைக்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,

லங்கா சீமெந்து லிமிட்டட்

கீரிமலை ரோட்,

காங்கேசன்துறை.

போன் :- 22605





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார் அமர்க்களத்தில்

# சிலமுக்கியபிரமுகர்களின் மனைவிமார்கடத்தப்படுவர்?

(கொழும்பு)

நத்தார் அமர்க்களத்தின்போது கொழும்பில் சில முக்கிய பிரமுகர்களின் மனைவிமார் 'பயங்கரவாதிகளால்' கடத்தப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பயங்கரவாதிகள் தமது பெண் சகாக்கள் மூலமாகவே இதனை நிறைவேற்றுவார்களென்றும், அவர்கள் சேலை அணிந்தே இக்கடத்தலில் ஈடுபடுவார்களென்றும் பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் கூறப்பட்டது.

இத்துடன் கொழும்புக்கு ஏனைய தெற்குப் பிரதேசங்களுக்கும் பௌத்த பிக்குகளின் மாறு வேடத்தில் பயங்கரவாதிகள் ஊடுருவுகிறார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளதாம். (கி)

# 'கடும்' நடவடிக்கை பற்றி வர்த்தமானி அறிவிப்பு

சென்னை, டிச. 24

தமிழ்த்தீவிரவாதிகளை ஒடுக்க இலங்கை இராணுவம் இனிமேல் ராக்கெட்டுகளையும், வடிகுண்டுகளையும், சிறியரக பீரங்கிகளையும் பயன்படுத்துமென்று இலங்கை அரசு தனது வர்த்தமானி அறிவிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளதாக சென்னை வானொலி நேற்று அறிவித்தது.

பருத்தித்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை ராணுவத்தினரின் முகாமொன்றைத் தாக்கிய தமிழ்த் தீவிரவாதிகளை எதிர்த்துத் தாக்க பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டனவென்றும், இது இராணுவத்தினர் சிறுரக ஆயுதங்களுடன், [illegible]ரக ஆயுதங்களையும் பயன்படுத்தியதற்கு அடையாளமாகும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளதாகவும் அவ்வானொலி அறிவித்துள்ளது.

## ரயிலில் குண்டு வெடிப்பு 25 பேர் பலி!

ரோம் நகர் டிச. 24

இத்தாலியில் ரயிலொன்றில் குண்டு வெடித்ததால் 25பேர் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இக் குண்டு வெடிப்பின் போது அந்த ரயிலின் இரு பெட்டிகள் நாசமாகியதாகவும் கூறப்பட்டது.

## சிங்கப்பூரில் ஆளும் கட்சி வெற்றி

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தற்போதய பிரதமர் லீக் குவான் யூவின் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

மொத்தம் 79 தொகுதிகளில் இக்கட்சிக்கு 77 இடங்கள் கிடைத்தன. எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சிக்கு இரண்டு இடங்கள் மட்டுமே கிடைத்தன. தொழிலாளர் கட்சியின் தலைவரும் தற்போதய பாராளுமன்றத்தின் ஒரேயொரு எதிர்கட்சி உறுப்பினருமான திரு. ஜெ. வி. ஜெயரத்தினம் வெற்றி பெற்றுள்ளார். (சூ)

## ட்ராக்டர், மோட்டார் சைக்கிளை கச்சேரிக்கு கொண்டுவர உத்தரவு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல ட்ராக்டர், மோட்டார் சைக்கிள்களையும் முல்லைத்தீவு கச்சேரிக்கு கொண்டுவருமாறு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர் மூலம்இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (க)

## இந்திய பொதுத் தேர்தல்:

# முதல் கட்ட வாக்களிப்பு: நேற்று ஆரம்பம்!

(புதுடில்லி)

இந்தியாவின் 8-வது பொதுத்தேர்தலில் 387 லோக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான முதல்கட்ட வாக்களிப்பும், தமிழ்நாடு, அருணாசல யூனியன் பிரதேச சட்டசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வாக்களிப்பும் நேற்றுக் காலை ஆரம்பமானது.

1[illegible] மாநிலங்களுக்கும், 6 யூனியன் பிரதேசங்களுக்குமான வாக்களிப்பே நேற்று ஆரம்பமானது.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு சட்ட சபைக்கு 232 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவும், தமிழ்நாட்டிலிருந்து லோக சபைக்கு 38 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவும் நேற்று ஆரம்பமானது.

### தேர்தல் முடிவுகள்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவுக்குள் 100 லோக சபா தொகுதிகளின் தேர்தல் முடிவுகளும், அடுத்தநாள் 100 லோக சபைத் தொகுதிகளின் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிடும் என்று தேர்தல் கமிஷன் செயலாளர் திரு. ஆர். கணேசன் தெரிவித்தார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் தமிழ் நாடு சட்டசபையின் 40 அல்லது 50 தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிடுமென்றும் அவர் தெரிவித்தார்.




வட்டுக்கோட்டை லயன்ஸ் சுழகம் நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு ஒன்றை அண்மையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடத்தியபோது அதில் யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் (திருமதி) தனலட்சுமி சரவணபவானந்தன் உரையாற்றுவதை படத்தில் காணலாம். கருத்தரங்கிற்கு தலைமைவகித்த டாக்டர் எமில் அத்தனசியாரும் படத்தில் காணப்படுகின்றார்

(படம்: பண்டத்தரிப்பு நிருபர்)

## திக்கம் பகுதியில் மக்கள் வெளியேற்றம்

[கொழும்புத்துறை]

அரசின் புதிய பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் கடற்கரையிலிருந்து நூறு மீற்றர் பிரதேசம் தடைசெய்யப்பட்டுள்ளதையடுத்துப் பொலிகண்டி, திக்கம், சக்கோட்டை இன்பருட்டிப் பகுதி மக்கள் தமது வீடுகளைவிட்டு அகதிகளாக வெறியேறியுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் குறிப்பிட்ட 100 மீற்றர் பிரதேசத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்களை வெளியேறுமாறு ஒலிபெருக்கிமூலம் அறிவித்ததைத் தொடர்ந்து இப்பகுதிப் பொதுமக்கள் தமது வீடுகளையும், வளவுகளையும் கைவிட்டு வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இப்பகுதிகளிலிருந்து வெளியேறிய குடியிருப்பாளர்கள் தற்போது தமது உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும், வளவுகளிலும் தற்காலிக வாசஸ்தலங்களை அமைத்துள்ளனர்.

# நிலத்தடி கேபிள் மூலம் பேர்லினுடன் தொடர்பு!

## ஒருவர் கைது

(கொழும்பு)

நிலத்தடி தொலைபேசி 'கேபிள்' மூலமாக பெர்லின் நகருடன் தொடர்புகொண்டதாகக் கூறப்படும் தமிழர் ஒருவர் கொழும்பில் கைதாகியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வாரம் கோட்டைப்பகுதியில் இடம் பெற்றது. கனகராஜா சிவானந்தம் என்ற இந்த நபர் கடந்த 4 வருடங்களாக தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் பரிசோதகராகப் பணியாற்றியவர்.

மேற்கு ஜெர்மன் பெர்லின் நகருடன் இவர் கோட்டை பஸன்ஸ் வீதியிலுள்ள நிலத்தடி கேபிள் மூலமாகத் தொலைபேசித் தொடர்பு மேற்கொண்டாரம்.

கோட்டைப்பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட இவரை கோட்டை மாஜிஸ்திரேட் ஜனவரி 3-ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகளுடன் இவருக்குச் சம்பந்தமிருக்கலாம் என்று பொலிசாரால் சந்தேகிக்கப்படுகிறது. (கி)

## கிருமி நாசினியாக மாறியது

(போபால்)

போபால் யூனியன் கார்பைட் ஆலையிலிருந்த முழுசயனைட் நச்சு வாயுவும் கிருமி நாசினியாக மாற்றப்பட்டுள்ளது. இருபத்து மூன்றரை தொன் வாயு இவ்வாறு மாற்றப்பட்டது.

## இடமாற்றம்

(வவனியா)

வவனியா தபால் நிலையத்தில் கடமை புரிந்த 14 ஊழியர் ஜனவரி முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்திற்கே கூடுதலானோர் இடமாற்றம் செய்யப்படடுள்ளனர்.

## நெதர்லாந்தில்

# இலங்கைத் தமிழ் இளைஞர் உருவாக்கியசங்கம் குலைந்தது!

(க. ஜீவகதாஸ்)

நெதர்லாந்தில் அரசியல் தஞ்சம்கோரி அடைக்கலம் புகுந்திருக்கும் சுமார் 130 இலங்கைத் தமிழ் வாலிபர்களால், சில மாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு இயங்கி வந்த 'இலங்கைத் தமிழர் சங்கம்' அதன் செயல்ப்பாடுகளை இம்மாத முற்பகுதியிலிருந்து நிறுத்திக் கொண்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த வாலிபர்கள் மத்தியில் நிலவிவந்த ஒற்றுமையின்மை, கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் காரணமாக சங்கத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் எவ்வித அர்த்தமுமில்லை என இச்சங்கத்தின் நிர்வாகிகள் கருதியதன் காரணமாக இச்சங்கம் குலைக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இக்குறித்த சங்கத்தின் சார்பாக, சில பலவேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தும்கூட அவற்றினை நடைமுறைப்படுத்த முடியவில்லை என இச்சங்கத்தின் முன்னாள் செயலாளரான திரு. கே. சிவதாசன் தெரிவித்திருந்தார்.

இதன்பின்னர் நெதர்லாந்தில் வதியும் சுமார் 20 தமிழ் வாலிபர்கள் இணைந்து தமிழர் டச்சு இணைப்புச் சங்கம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர் என்ற செய்தியும் கிட்டியுள்ளது.

இப்புதிய சங்கத்தின் பணிகள் என்ன என்பது பற்றி எதுவும் தெரியமுடியவில்லை.

நெதர்லாந்து தேசத்தவர்களில் சிலர், இலங்கைத் தமிழர் சங்கத்தில் அக்கறையுள்ளவர்களாக இருந்தபோதிலும் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் மத்தியில் நிலவிய ஐக்கியமின்மை, ஆதரவின்மை போன்ற காரணங்களால் அவர்களுக்கும் இவர்கள் மீது [illegible] ளது எனவும் தெரிகின்றது.

# இப்படியும் நடக்கிறது

"என்னமாதிரி... போகலாமா...?"

"அந்தப் பக்கம் எப்படி... நிற்கிறாங்களா?"

"எத்தனை பேராம்... அவ்வளவு மோசமா...?"

"இதாலபோய் அதால வருவதாகக் கேள்வி...... பார்த்துப் போங்க..."

"என்ன இன்னும் போகல்லையா... பார்த்துச் சொல்லுங்க. அவசரமாக அங்கால போகவேணும்.."

மேலே உள்ளதைப் படித்ததும் ஏதோ வெளிநாட்டுத் தொலைபேசி 'குறொஸ்கனெக்ஷன்' என்று எண்ணிவிட மாட்டீர்கள் என்று நினைக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில், பொழுது விடிந்தது முதல், பொழுது சாய்வதுவரை மக்களின் ஓயாத மனப்பிராந்திதான் இது!

—ஊடுருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படி ஒரு ஆலோசனை

மானிப்பாய்)

இராணுவத்தினரின் திடீர் தேடுதல்வேட்டையின் போது காண்பிக்கக்கூடியதான வகையிலமைந்த அடையாள அட்டைகளை வழங்க யாழ்ப்பாணத்திலுள்ள சில அரச திணைக்களங்கள் ஆலோசனை செய்துவருவதாகத் தெரியவருகிற .

இவ்விதத்திலமைந்த உத்தியோகபூர்வமான அடையாள அட்டைகளை வரும் திங்கட்கிழமை தமது அலுவலக ஊழியர்களுக்கு வழங்கயாழ். கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ஏற்ற நடவடிக்கை எடுத்துள்ளத 'க அறியப்படுகிறது

இந்த அலுவலகத்தில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு இது பலவித சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள உதவும் எனப்பெரிதும் நம்பப்படுகிறது.

## தடுப்பூசி மருந்தில்லை

(பச்சிலைப்பள்ளி)

செப்பியன்பற்று அரசினர் வைத்தியசாலையில், மருந்து வகைகள் நோய்த் தடுப்பூசி மருந்துக்கள் இல்லை.

வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

வின்ஸர் (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்(

ஸ்ரீதர் (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதே
தாயில்லாமல் நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் மினி
10-15, 1-30
மோகன். . நளினி...
ஜெய்சங்கர் . சத்யராஜ்.
நடிக்கும்
மணிவண்ணனின்
24 மணிநேரம்

இன்று முதல்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
சந்திரசேகர், சுகாசினி
ராஜீவ்
பாலைவனச்சோலை
புதிய பிரதி
(ஈஸ்மன் கலர்)
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன், ஸ்ரீதேவி
நடித்த
சத்தியம்
(ஈஸ்மன் கலர்)


# மன்னார் தமிழ்ப் பொலிசார் அனைவரும் இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பொலிசார் அனைவரும் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

கடந்த 22-ம் திகதி முதல் இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாக கூறப்பட்டது இவர்கள் இன்னமும் இடமாற்றம் செய்யப் 'ட்ட இடங்களுக்குச் செல்லவில்லை.

## நத்தார் கோரிக்கை

[கொழுப்புத்துறை)

வடபகுதியில் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்களையும், தற்போதைய துயர சூழ்நிலைகளையும் மனதில்கொண்டு யாழ் கத்தோலிக்க கிறிஸ்தவர்களை கிறிஸ்மஸ் விழாவை ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டாமென்றுகத்தோலிக்க இயக்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை, நாவாந்துறைப் பகுதிகளில் உள்ள வர்த்தகர்களை நத்தார் விழாக் காலத்தில் பட்டாஸ் வெடிவியா ாரம் செய்யவேண்டாமென்றும் கோரப்பட்டுள்ளது.

## அகதிகளுக்கு உதவ கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அகதிகள் முகாமில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு உடை, உணவு போன்றவற்றை கொடுத்துதவுமாறு முல்லைத்தீவு பிரஜைகள் குழுத்தலைவர் டாக்டர் ரி. குணரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## எரிந்தநிலையில் மற்றொரு ஜீப்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடியில் அண்மையில் கண்ணிவெடியின் தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் ஜீப் து 'த்திச் சென்ற மற்றொரு ஜீப் மட்டக்களப்பு நாவற்காடு பகுதியில் எரிந்த நிலையில் கிடக்கக் காணப்பட்டது.

## பொதுமக்கள் நடமாடத் தடை

(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள வீதியில் நேற்றுத் தொடக்கம் பொதுமக்கள் நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியால் முன்னர் வாகனங்கள் செல்வதற்கு மட்டும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

## புதுப்பிக்குமாறு கோரிக்கை

(கொழும்புத்துறை)

மதுவிற்பனையாளர்கள் மதுபான விற்பனைக்கான லைசென்சைப் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்

இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று யாழ் மாவட்ட மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## வெளியேற்ற நடவடிக்கை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலய காணியில் அத்துமீறி குடியேறியவர்களை நீதி மன்ற உத்தரவின் பிரகாரம் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப குடும்பங்களை வெளியேற்றுமாறு கோரி பிரஸ்தாப ஆலய பரிபாலனசபையினர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கில் பரிபாலனசபையினருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## நியமனம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட மதுவரித் திணைக்கள மேலதிக உதவி ஆணையாளராக திரு எஸ். தியாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரிப்பகுதி மதுவரி அத்தியட்சகராகக் கடமையாற்றிய இவர் பதவி உயர்வு ன் யாழ் மாவட்ட மதுவரித்திணைக்களத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## வவனியாவிலும் காசோலை

(பச்சிலைப்பள்ளி)

வவனியா மாவட்ட அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுக்கு டிசம்பர் மாதச் சம்பளம் தனித்தனியே காசோலைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

இற்கான நடவடிக்கையினை வவனியா மாவட்ட கல்வி அலுவலக மேற்கொண்டது.

## அங்குரார்ப்பணம்

(பச்சிலைப்பள்ளி)

மருதங்கேணி செம்பியன் பற்று ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந் நிலையத்தின் தலைவராக டாக்டர் பொ. தர்மராசசிங்கம் செயலாளராக திரு. வி நடராசாவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## மகஜர்

(சுண்டிக்குளி)

நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் நவாலி ஆரம்ப சுகாதார கவனிப்பு குழுவினரும் கூட்டாக சேர்ந்து அப்பகுதியில் சுகாதார குறைபாடுகள் பற்றியும் அப்பகுதி சிசுக்களின் போஷாக்கின்மை பற்றியும், மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கும் சிசுக்களின் கிளினிக்கை நவாலி வை. எம் சி. ஏ. மண்டபத்தில் இலகுவாக இயங்கச் செய்வது பற்றியும் யாழ். சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

## இளைஞர்கள் சோதனை

[கொழும்புத்துறை]

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டாவது தடவையாக சில இளைஞர்கள் சோதனை மேற்கொண்டனர். சில தினங்களுக்கு முன் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நுழைந்த சில இளைஞர்கள் அங்கிருந்த உணவுக் கட்டுப்பாட்டுக் குடியிருப்பாளர் உறுதியுரைப் படிவங்களை அபகரித்துச் சென்றிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை திரும்பவும் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குச் சென்ற ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் சிலர் மேலும் மேலும் குடியிருப்பாளர் உறுதியுரைப் படிவங்கள் வந்துள்ளனவா என்று அங்கிருந்த உத்தியோகத்தர்களிடம் விசாரித்ததுடன் இப்படிவங்களைத் தேடி உதவி அரசாங்க அதிபரின் அலுவலக அறைகளில் சோதனை நடாத்திய பின் திரும்பிச் சென்றனர்.

# யாழ். ஆஸ்பத்திரிகளை எதிர்நோக்கும் பிரச்னை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளை பெரும் மருந்துத்தட்டுப்பாடு ஒன்று எதிர்நோக்குவதாகவும தற்போது கையிருப்பில் இருக்கும் மருந்து வகைகளை மிகவும் கவனமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துமாறும் யாழ் சுகாதார திணைக்கள உயர்அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

யாழ். அரசினர் வைத்திய சாலையை பொறுத்தவரை மருந்து பற்றுக்குறை அதிகமாக பாதிக்காது என்றும் மற்றும் கிராமப்புற அரசினர் வைத்தியசாலைகள் இவ்விடயத்தில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்துமென்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். இவ்விடயத்தில் சகல ஊழியர்களும் நிலைமையை நன்குணர்ந்து செயல்பட வேண்டும் என்றும் மருந்துகளை கவனமாகவும் சிக்கனமாகவும் பாவிக்க பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வடக்கில் 'இறால்' சீசன் - ஆனால்....

(பச்சிலைப்பள்ளி)

வடபகுதியில் 'இறால் சீசன் ஆரம்பமாகி உள்ளது

வடபகுதி கரையோரம் தடைப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், இறால் சீசன் ஆரம்பமாகியும் மீனவர்கள் தொழிலைச் சுதந்திரமாக செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது

பருத்தித்துறை கிழக்குப் பிரதேசம் தொடக்கம் முல்லைத்தீவு வரையுள்ள கடற்பிரதேசத்தில் டிசம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை இறால் பிடிக்கப்பட்டு வருவது வழக்கம்

இம்முறை இத்தொழிலைச் செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளதால் மீனவக் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன.

## சுவரொட்டிகளை அகற்றச்செய்தனர்

(பண்டத்தரிப்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென பண்டத்தரிப்புக்கு மூன்று வாகனங்களில் வந்த ராணுவத்தினர் பண்டத்தரிப்புச் சந்தியிலுள்ள மதில் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை அவ் வீதிவழியால் சென்றுகொண்டிருந்த பொதுமக்களைக் கூப்பிட்டு அகற்றச்செய்தனர் இதனால் இப்பகுதி மக்கள் மிகுந்த அச்சமடைந்தனர் மக்கள் நடமாட்டமும் மிகவும் குறைந்து காணப்பட்டது.

## நச்சுக்காய் தின்று இளம் பெண் தற்கொலை

(திருகோணமலை)

கண்ணில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மனம் நொந்துபோன 32 வயதான இளம் பெண் வைரமுத்து ந 'கம்மா காட்டிற்குச் சென்று நச்சுக்காய் பிடுங்கிச் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்

கிளிவெட்டிவாசியான இப்பெண்ணின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் வெளியாகின.

கிளிவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். சனகசபை பரண விசாரணை நடத்தினர்

தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது மூதூர் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

## ரஜீவ் சோனியா வாககளிப்பு

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் திரு. ரஜீவ் காந்தியும் அவரது பனைவி சோனியாவும் நேற்றுப் புதுடில்லிக்கு அருகிலுள்ள வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்தனர்

## வட்டுக்கோட்டையில் கொள்ளை

(பண்டத்தரிப்பு)

வடுக்கோட்டை - சித்தன் கேணி வீதியிலுள்ளதும் வட்டு இந்துக் கல்லூரிக்கு சமீபமாகவுள்ளதுமான கடையொன்று நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த அரிசி, மா, உட்பட பல பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்திலேயே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## சண்டிலிப்பாய் பிரஜைகள் குழு

(பண்டத்தரிப்பு

சண்டிலிப்பாய் பிரஜைகள் குழுவின் அங்குரார்பபண பொதுக்கூட்டம் சண்டிலிப்பாய் இந்துமகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது குழுவின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: டாக்டர் ரி. கோபாலசிங்கம் ஜே பி, உபதலைவர். திரு பொ. செல்வரத்தினம் ஜே பி. இணைச்செயலாளர்கள்: திரு மு பரராசசிங்கம், திரு இ. சிவசுப்பிரமணியம், திரு செ. நித்தியானந்தம். செயற்குழு உறுப்பினர்களாக நான்கு பேர் தெரிவாகினர்.

## பச்சிலைப்பள்ளி உணவுப் பொருள் நிலைமை

[பச்சிலைப்பள்ளி]

பளைப பகுதியில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதினாலும், தட்டுப்பாடுகள் நிலவுவதினாலும், பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டையிலேயே உணவுப் பொருட்களை விற்பனைசெய்து வருகின்றன.

## நிவாரண உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இராணுவ துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியாகிய திருநகர் வாசிகளான சண்முகம், திருமதி பாக் யம் ஆகிய இருவரின் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை கிளிநொச்சி பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்கம் நல்கியுள்ளது பிரஸ்தாப சங்கப் பொருளாளர்நாயகம் சிற்றம்பலம் சங்கச் சார்பில் உதவிகளை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவினரும் இக்குடும்பங்களுக்கு உதவ முனவந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

''ஊருக்குத் தீமைகள் செய்து — உன்
உள்ளம் மகிழ்வது பாவம்.
யாருக்கும் தீமையில்லாமல் — நீ
அழிந்துவிடுவதே லாபம்!

— இயேசு காவியம்

# நமது நோக்கு

## நட்புரிமைக்குரிய நன்னாள்

''ஆண்டொரு பிள்ளை ஆயிரம் பெறலாம், இயேசுவைப்போல இன்னொரு குழந்தை ஈசனைக் கேட்டே இனிப் பெறவேண்டும்'' என்று இயேசு காவியம் கூறும் உண்மையை ரசிக்கும் இந்நன்னாளில், கதவு கிரீச், கிரீச் என்று சத்தமிடுகிறது.

தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில், குறிப்பாக யாழ்ப்பாண நன்னகரில் துப்பாக்கியின் திடீர் நாடகம் தொடர்கின்றது. ஷேக்ஸ்பியரின் 'Drest in brief authority' நினைவுக்கு வருகிறது. இதற்கு முடிவு உண்டென்பது தெளிவு. இலங்கை ஆயுதப்படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் நகரத்தின் மத்தியில் தந்தையும் பத்து வயது மகனும் பலியானதும் மற்றும் மூவர் பலத்த காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும், இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் நிர்க்கதியின் மிகக் கொடுமையான படம்.

யாழ்ப்பாணத்தில் இருபாலையிலும் முல்லைத்தீவிலுள்ள சிறுகிராமங்களிலும் இராணுவம் நடத்திய சோதனைகளில் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் அகதிகளாக வெளியேறி உயிரைப் பாதுகாக்க உறைவிடமில்லாமல் தவிக்கின்றனர் இந்த நிலை மாற உதவும் சக்திளதனையும் எவரும் தடுக்க முடியாது.

நட்புறவுக்கும், நல்லெண்ணத்துக்கும் உரித்தான நத்தார் தினத்தில் எமது சகோதரர்கள் இந்த அவலத்தின் அடித்தளத்தை எட்டிவிட்டதை நாம் எவ்வாறு அலட்சியம் செய்வது? நிவாரண நடவடிக்கையில் தீவிரப்படுவதே நம் கடன்.

மகிழ்ச்சிதான் மனதிற்கு ஆறுதலளிக்கும் அருமருந்து. அந்த மகிழ்ச்சிக்கு வழி, பிறரை மகிழ்விப்பது தான் என்பதே நத்தாரின் நற்செய்தி. முதலாளித்துவமும், பிரபுத்துவமும் போதிக்கும் கருத்துக்களுக்கு முரணான செய்தி இ .

இன்று நாடனைத்திலும் ஒரே குழப்பமான நிலை. இதனைப் பயன்படுத்தி சிக்கல்களைப் பெருக்கி நல்ல அறுவடை செய்ய முயலும் ''நண்பர்கள்'' பற்றி நாம் எச்சரிக்கையாயிருப்பதும் இச்செய்தியின் இன்னொரு அம்சம்.

மனித நாகரிகத்தின் அடித்தளம் சமயமே. ஆனால் சமுதாயம் வளர்ந்தால்தான் சமயமும் வளர முடியுமென்பதையும் நாம் இன்று நினைப்பில் கொள்ள வேண்டும்.

அன்றாடம் வாழ்க்கைக்கே போராடுபவனிடத்துச் சமய உணர்வு வளம்பெறுவது எப்படி?

நாட்டின் ஏழைமையை நன்குணராது பொருள் படைத்தவருக்கு வசதியளிக்கும் ஆட்சி இலகுவில் நகர இடமளிக்காது. மொழி, இனம், மதம் என்ற போர்வையில் பலவித போர்க்களங்களை உருவாக்கும் நவீன ஆயுதங்களில் நம்பிக்கை வைத்து எந்த எதிர்ப்பையும் அடக்கி ஒடுக்குவதேயன்றி, சமுதாயத்தின் சமத்துவ அமைப்பிற்கு இடமளிக்காது.

இதனால் சமய நெறி நின்று வாழும் வாழ்வு சிதைவடைகின்றது. மக்கள் மனமிரங்கி பிறர் துன்பம் துடைக்கும் தொண்டில் ஈடுபடுவதே இன்று நாம் பண்புள்ள சமூகமென்பதற்கு அவசியம் தேவையாகின்றது. பிறர் நம்மைக் கண்டு பொறுமைப்படுமளவிற்கு நடந்து கொள்வது இன்றைய நிலையில் பெருங் ௨ற்றமாகும்.

## யாழ். பல்கலைக்கழகம்

# 85ம் ஆண்டு விரிவுரைகள் ஜனவரி 21ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் 85ம் ஆண்டுக்கான விரிவுரைகள் ஜனவரி 21ம்திகதி ஆரம்பமாகவுள்ளதாகப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

கலை, விஞ்ஞான, மருத்துவ பீடங்களின் புது வருடத்துக்கான விரிவுரைகள் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலையை முன்னிட்டு ஜனவரி 21ம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது (மா)

## மீண்டும் நடத்த கோரிக்கை

(கிளிநொச்சி)

க. பொ. த சாதரணதரப் பரீட்சைகளை மீண்டும் உரிய அவகாசம் கொடுத்து நடத்துமாறு கோரும் மகஜர்களை கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் ஜனதிபதிக்கும் கல்வி அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

# இறந்து கிடந்த பெண் சித்தசுவாதீனமற்றவராம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் தட்டாதெருவில் துப்பாக்கிச் சூட்டுக்குப பலியானவர், கோண்டாவிலைச் சேர்ந்த 33 வயதான கமலாதேவி என்று அவரது கணவன் முத்தன் தர்மலிங்கத்தால் நேற்று மரணவிசாரணையின் போது அடையாளம் காட்டப்பட்டார்.

யாழ். மரண விசாரணை அதிகாரி கே, கேசவன் விசாரணை நடத்தினர்.

காலமானவரின் கணவன் தர்மலிங்கம் [தொழிலாளி] சாட்சியமளிக்கையில்: இறந்தவருக்கு நாய் கடித்ததால் கடந்த வெள்ளி ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்து கட்டியதாகவும் கூறினர்.

சனிக்கிழமையும் ஆஸ்பத்திரிக்கு ஊசி ஏற்றப்போக வேண்டுமென்று கூறிவிட்டுச் சென்றாரென்றும், இரவு வீடு திரும்பவில்லையென்றும் ஞாயிறு நண்பகல் தன் மனைவி இறந்து கிடப்பதை அறிந்ததாகவும் கூறினர்.

5 வருட காலமாக அவர் சித்தசுவாதீனமற்றிருந்ததாகவும் தெரிவித்தார்.

கிராமசேவையாளர் க. கந்தசாமி சாட்சியமளிக்கையில் இறந்தவரின் கைகளும், கண்களும் கட்டப்பட்டிருந்ததாகவும், சடலத்தை ஆஸ்பத்திரியில் தான் ஒப்படைத்ததாகவும் கூறினர்.

மரணவிசாரணை அதிகாரி பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். [க]

## கொழும்புக்கு போகின்றன

[யாழ்ப்பாணம்]

உபயோகிக்க முடியாத ட்ரக்குகள், ஜீப் வண்டிகள், கவச வண்டிகள் முதலியவை புகையிரத வகன்கள்மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களின்போது பழுதடைந்த வாகனங்களும் அவற்றுள் அடங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. (மா)

## அமைச்சரவை..,

(1ம்பக்க 3ம் கலத்தொடர்ச்சி)

டனக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்:

அவரது இந்த நடவடிக்கை தொடர்ந்து அமைச்சரவையில் அங்கம் வகிக்க அவருக்கு விருப்பமில்லாதிருப்பதையே காட்டுகின்றது என்றும் ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

திரு மத்தியூவுக்கு அவரது சொந்தக்கருத்துக்களை வெளியிட எத்தனையோ தடவை சந்தர்ப்பமளித்திருந்தேன். ஆனால் அச்சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் அரசாங்கத்தை தர்மசங்கடங்களுக்குள்ளாக்கியிருந்தார்.

அவர் இவ்வாறு நடந்து கொள்வார்என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை என்று ஜனதிபதி தெரிவித்துள்ளார். (கி)

## எந்தவகை...

(1மபக்க 4ம்கலத் தொடர்ச்சி)

கொடுத்துவிடும் நாம் அவைகளை முற்றாக எதிர்க்கின்றோம் நாட்டின் இறைமைக்கு ஆபத்து ஏற்படும்போது மகாசங்கத்தினர் தமது உயிர்களையே பணயம் வைப்பார்கள் என்பது சரித்திரம் என்று அவர் கூறினர் எமது எதிர்ப்பு புறக்கணிக்கப்பட்டால் எம்மிடமுள்ள ஆயுதத்தைப் பிரயோகிப்போம். நாடுமுழுவதும் போராட்டங்களை நடத்துவோம் ஆயுதப்படையோ வேறு எவருமோ எம்மைத் தடுத்து விடமுடியாது பாராளுமன்ற உறுப்பினரை வற்புறுத்துவோம். அரசு தொடர்ந்தும் அலட்சியம் செய்தால் பொதுவாக்கு கணிப்பு நடத்தும்படி ஜனதிபதியைக் கேட்போம் என்றார். மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கு அதிகமாக ஒரு அங்குலம் தானும் விட்டுக்கெடுக்கமுடியாது என்றார் அவர்

வண. பஞ்ஞாசீக தேரோ பேசும்போது தென்பகுதியிலுள்ளமாவட்ட அபிவிருத்தி சபைகள் ஒன்றாக இணையும் என்று சொல்ல முடியாது ஆனால் வடக்கில் அபிவிருத்தி சபைகள் ஒன்றாக இணைந்து சமஷ்டி ஏற்படுத்திக் கொள்வாாகள் அதன் பின் தென் இந்தியாவிலிருந்து பயிற்சி பெற்ற போர் வீரர்களை இங்கு கொண்டு வருவார்கள் என்றார்.

## யாழ். நகரில்..

(1ம்பக்க 4ம் கலத்தொடர்ச்சி]

வைத்திலிங்கம்-யாழ்ப்பாணம், இராசநாயகம் பவளராஜன்-பெரியகலியாண், மயில்வாகனம் சந்திரசேகரம்-தெல்லிப்பளை, ஹச்சி மொகமட் தௌவ் நாஸர் - யாழ்ப்பாணம், அந்தோனியப்பன் அந்தனிஸ் பெனம் - யாழ்ப்பாணம்.

வடபகுதியின் பல்வேறு இடங்களைச் சேர்ந்தவர்களும் 19-ம் திகதியன்று கைதாகியுள்ளனர். இவர்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 84 ஆகும்.

(மிகுதி நாளை வெளிவரும்)

## மூதூரில்...

(1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். அவசரகாலச் சட்டத்தின் கீழ் விசாரணை நடைபெற்றது.

21-ம் திகதி கதிர்காமத்தம்பி தவராசா, சோமசுந்தரம் பாலசுந்தரம் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்,

22-ம் திகதி ஆயுதப்படையினர் தேடுதல் நடத்திய போது ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார் சடலம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

23-ம் திகதி ஆறுமுகம் முத்துக்குமார்[45] என்பவரின் சடலம் வீதியில் காணப்பட்டது.

நேற்று[24-ம் திகதி] கணேசபிள்ளை கோணலிங்கம் [52-வயது] என்பவர் வயலில் வேலைசெய்து கொண்டிருந்தபோது, சீருடையில் வந்தவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து மூதூர்ப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. [க]

## அகதிகளுக்கு உதவி தேவை

[முல்லைத்தீவு]

கொக்கிளாய், நாயாறு, குமுளமுனை மற்றும் இடங்களிலிருந்து முல்லைத்தீவில் அகதிகளாய்வந்து சேர்ந்துள்ள மக்களுக்கு, உணவும், உடைகளும் மற்றும் உதவிகள் தேவைப்படுவதாக முல்லைத்தீவு பிரஜைகள்குழு தலைவர் டாக்டர் குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

## யாழ். செயலகம்...

[1ம் பக்க 2ம் கலத்தொடர்ச்சி)

மறியல் செய்தனர்.

ஈச்சமோட்டை, பாஷையூர், கொழும்புத்துறை, பாண்டியந்தாழ்வு, கொய்யாத் தோட்டம் அன்னையர் முன்னணியினர் இந்த மறியலில் கலந்து கொண்டனர்.

யாழ் நகர் மற்றும் ஏனைய பகுதிகளில் கைதானவர்களின் தாய்மார்களும் இதில் கலந்து கொண்டனர்.

காலை 9 மணிக்கு ஆரம்பமான மறியல் பிற்பகல் 3 மணிக்கு முடிவடைந்தது.

''மனிதனை அடிமையாக்கும் சட்டங்களை உடைத்தெறிவோம்'' ''நரபலி கேட்பதை நிறுத்து'' கண்ணகியின் கோபம் மதுரையை எரித்தது எங்கள் கோபம் அதனிலும் கொடியது'' ''கடற்றொழிலாளர் குடும்பங்கள் பட்டினி சாவின் எல்லையில்'' ''புதுவருடம் எமக்கு சிறைவருடம்'' என்ற சுலோகங்கள் சுலோக அட்டையில் காணப்பட்டன. (க)



## மரண அறிவித்தல்

### திருமதி. அம்பலவாணர் திருவாத்தைப்பிள்ளை

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி. அம்பலவாணர் திருவாத்தைப்பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார்கள் இவர் காலஞ்சென்ற யாழ் பிரபல வர்த்தகர் திரு. மாணிக்கம் அம்பலவாணரின் அருமை மனைவியும், சிவசாமி தொழில்நுட்ப உதவியாளர். [நீர்ப்பாசனத் திணைக்களம், வவனிக்குளம்] குணபாலசிங்கம் பிரதம பொறியியலாளர், [தேசிய வடிகால் நீர்வளசபை, யாழ்ப்பாணம்], சண்முகராசா உரிமையாளர் [ஸ்ரீ மகள் ரேடேஸ் ஆஸ்பத்திரிவீதி, யாழ்நகர்] ஆகியோரின் அருமைத் தாயாரும், ரதிதேவி, தனபாக்கியம், விஜயராணி, ஆகியோரின் அருமை மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்றுசெவ்வாய்கிழமை காலை 10-00 மணிக்கு கேரதீவு மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்இவ் அறிவித்தலைஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். 1080

## மரண அறிவித்தல்

### சொர்ணம் (இம்மி)

பண்டத்தரிப்பைச்சேர்ந்த சொர்ணம் காலமானார். இவர் காலஞ்சென்ற கே. விரட்ணம், காலம்சென்ற கே. வீரசிங்கம் ஆகியோரின் சகோதரியும், ராணிரட்ணம், பேர்ல் வீரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், விஸ்வேந்திரராஜ் (National Apprenticeship Board) லக்ஷ்மி லண்டன்), மகேந்திரா Holiday Inn Jeddah), சூரியகுமார் வீரசிங்கம் ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரது தகனக்கிரியைகள் பண்டத்தரிப்பில் இன்று [25-12-84] செவ்வாய்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும்.

பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை (அருகாமை)
பண்டத்தரிப்பு. 1091



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org